ஞாயிறு வெளியீடு தனிப்பிரதி 0—1—3 REGD No. M. 4642


# திராவிடநாடு

மலர் 5 | 15—12—46 | இதழ் 32


## ★ அற்புதம் பாரீர்! ★

(நக்கீரன்)

பாண்டியனுடைய வெப்பு நோயைச், சம்பந்தர், தம்முடைய "மந்திரமாவது நீறு" என்னுந் தேவாரத்தால் தீர்த்து விட்டார் என்றும், சமணர்கள் வாதில் தோல்வி அடைந்தனர் என்றும் சொல்லப்படும் திருவிளையாடலைச்செய்து முடித்த பின்னர், சைவ—சமண உயர்வு தாழ்வுப் போட்டி நடத்துவதில் முற்றுந் தோல்வி காண்பதற்காக, மேலும் இரண்டு சோதனைகள் செய்யப்பட்டனவாம். அவற்றில் ஒன்று, நெருப்பு; இன்னொன்று, நீர். அதாவது, சைவ சமயத்தின் உயர்வை நிலைநாட்டச், சம்பந்தர், தம்முடைய தேவாரப் பதிகங்கள் அடங்கிய ஏட்டை அவிழ்த்து, அதிலுள்ள ஒருபாடலை எடுத்து, அவ்வேட்டினை நெருப்பிலிட்டாராம். சமணர்களும் அதுபோலவே, தங்கள் சமய உண்மையை ஒரு ஏட்டிலெழுதி அதனை நெருப்பில் இட்டனராம். சம்பந்தரால் இடப்பட்ட ஏடு, நெருப்பில் எரிந்து அழியாமல், முன்னையைவிட அதிக பளபளப்போடு பச்சைப் பசேலென விளங்கிற்றாம். சமணர்களால் இடப்பட்ட ஏடு, எரிந்து சாம்பராயிற்றாம்.

அன்பர்களே, சைவ சமயத்தின் உயர்வையும் உண்மையையும் அறிய இச்சான்று ஒன்றே போதாதோ? எப்படிப்பட்ட அற்புதம் இது! இத்தகைய அளப்பரும் அற்புதத்தை நடாத்திக் காட்டிச், சைவத்தின் உண்மையை நிலைநாட்டிய பின்னரும், சிலர்,—ஏன் பலர், அச்சிறந்தசமயவழி நில்லாமல், வேறெந்தெந்தச் சமயங்கள் வழியோ சென்று "சீரழிவு"படுகின்றனரே! என்னே இவர்தம் "அறியாமை!" அனலில் இட்ட ஏடு அழியாதிருந்தது என்பதைப் பார்க்கிலும் வேறு அற்புதம் உலகில் இருக்க முடியுமோ! உலக அற்புதங்கள் ஏழுக்குப் பின் எட்டாவது என்று ஏதேதோ செல்லுகின்றார்களே, அற்புதம் என்றால், எது? அது எப்படி நிகழ்வது என்பதறியாதார் சிலர். அவர்கள் அறியார் போலும், இதுவும் இதுபோன்ற இன்னும் பல வியத்தகு அற்புதங்களையும் அடியவர் குழாங்கள் அன்று நடாத்திக் காட்டினர் என்ற உண்மையினை! இறந்தவன் பிழைத்தது— எலும்பு பெண்ணானது—அறுந்த மூக்கும் தேய்ந்த கையும் வளர்ந்தது—கறியாகச் சமைக்கப்பட்டபிள்ளை பின் காளையாக வந்தது—கண்ணிடந்து அப்பியது—நீரால் விளக்கெரிந்தது—நஞ்சு அமுதானது—கல்லைக் கலமாகக் கடலில் ஓட்டியது—முதலையுண்ட பிள்ளையை அழைத்தது—ஆண்பனை பெண்பனையானது — அடைத்தகதவு திறந்தது — ஊமைபேசியது—பறையன் பார்ப்பானானது—யானையுங் குதிரையும் வானத்தில் பறந்தது—செங்கல் பொன்கல்லானது—ஆற்றிலிட்டது குளத்தில் கிடைத்தது — கிழவிகுமரியானது — கட்டியமனைவியைக் கண்டவன் பின்னால் அனுப்பியது போன்ற இன்னும் எத்தனையோ அற்புதங்கள், அடியவர்தம் அருட்டிறத்தினால் நடத்திக் காட்டப்பட்டனவே! இச்சொல்லப்பட்ட சில அற்புதங்கள் பெரியபுராண அடியவர்களால் மட்டும் நடத்திக் காட்டப்பட்டவை. இன்னும் எத்தனையோ எண்ணத் தொலையாத—எழுத ஏட்டிலடங்காத — வாயினால் சொல்ல வயது போதாத அத்தனை அற்புதங்கள் வேறுபல சைவ—வைணவ புராண இதிகாசங்களில் மலிந்து கிடக்கின்றன. இத்தனை அளவு கடந்த அற்புதங்கள் சைவத்தின் உண்மையையும் உயர்வையும் நிலைநாட்ட எடுத்துக்காட்டுகளாக இருந்தும், சமணரும் உலகிலுள்ள வேறுபற்பல சமயத்தவரும் இவற்றை அறியாமல், தத்தமக்குத் தோன்றியவாறெல்

லாம் நடக்கத் 'தலைப்பட்ட தடுமாற்றத்தினை' என்னென்பது!

ஏன், இவர்கள் எல்லாரும் இச் 'சிறந்த' சமயவழி நில்லாமல், வேறுவேறு சமயங்களை மேற்கொண்டனர் என்பதை எண்ணும் போது, சைவ—வைணவ புராண இதிகாசாதிகளில் பேசப்படும் அற்புதங்கள் எல்லாம் உண்மையாகவே நடந்தனவா? நடக்கக் கூடியனவா? என்பன போன்ற ஐயப்பாடுகளும், அவை குறித்த ஆராய்ச்சிகளும் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகின்றது. தீயிலிட்ட ஓலை—உலர்ந்த ஓலை—கட்டிவைக்கப்பட்டதால் மக்கிப்போன ஓலை, நெருப்பிலிடப்பட்டால் என்ன ஆகும் என்று சிறுமகாரைக் கேட்டாலும், அவர்கள், அது, உடனேஎரிந்து சாம்பராகும் என்று தான் கூறுவர். ஆனால், சேக்கிழார்—எப்படிப்பட்ட சேக்கிழார்? ஒரு நாட்டுக்கு அமைச்சராய்இருந்து அலுவல் பார்க்கும் அளவுக்கு அறிவு பெற்றிருந்தவராகப் பேசப்படும் சேக்கிழார்—அவர் கூறுகிறார், சம்பந்தரால் நெருப்பில் இடப்பட்ட ஏடு எரிந்து சாம்பராகாமல் இருந்ததுஎன்று. அவ்வளவோடு நிற்க அவருடைய அறிவுப்பெருக்கம் இடந்தரவில்லை. அதற்கு மேலும் கூறுகிறார் — நெருப்பிலிட்ட உலர்ந்த ஓலை (ஏடு,) முன்னில்லாத பசுமையுடனும் புதுமையுடனும் பளபளப்பாக விளங்கிற்று என்று. இதைக்கூறிய உடனே, தமது அடுத்தபாடலில் கூறுகிறார் — சமணர்களால் நெருப்பில் இடப்பட்ட ஏடு எரிந்து சாம்பராயிற்று என்று. அவ்விதம் கூறியதோடுநின்றாரா? இல்லை. அதற்கு மேலும் கூறுகிறார் — சமணர்கள், தாங்கள் நெருப்பில் இட்ட ஏட்டைத்தடவித் தடவிப் பார்த்தார்கள்—சாம்பரைப் பிசைந்த பிசைந்து பார்த்தார்கள்—தூற்றித் தூற்றிப் பார்த்தார்கள் என்பதாக. இத்துடனாவது விட்டாரா? இல்லையே! பாண்டியன் கூறியதாக இன்னொன்றும் கூறுகிறார்—அதாவது, சமணர்கள், தங்களுடைய ஏட்டைக் காண்பதற்காகச் சாம்பரைத் தடவியும் பிசைந்தும் தூற்றியும் பார்ப்பதைக் கண்ட பாண்டியன் சமணர்களைநோக்கி நகைத்து, 'இன்னும் நன்றாக அரித்து அரித்துப்பாருங்கள்' என்று கூறியதாக.

சேக்கிழார்தம் இக்கூற்று எப்படியிருக்கிறது பாருங்கள்! சம்பந்தரால் இடப்பட்ட ஏடு எரியவில்லை; சமணர்களால் இடப்பட்ட ஏடு எரிந்து சாம்பராயிற்று என்று கூறுவதோடு மட்டும் நின்றுவிட்டாலாவது, ஒருகால், சம்பந்தருக்கும் அவருடைய சைவத்திற்கும் சிறிதளவாவது மதிப்பும் பெருமையும் ஏற்பட்டிருக்கும். ஆனால், இங்கு அந்த அளவுக்கு எண்ணக்கூடச் சேக்கிழார் இடம் வைக்கவில்லை. ஒரே அடியாக 'முழுப் பூசனைக்காயைப் பரிமாறின சோற்றில் மறைப்பது' போன்ற முறையில் தம்முடைய அறிவுக்கூர்மையால் அளந்து கொட்டியிருக்கிறார். சம்பந்தரால் நெருப்பிலிடப்பட்ட ஏடு எரியாமல் இருந்ததென்பதை எப்படியாவது மெய்ப்பிக்க வேண்டுமென்பதையே குறியாகக் கொண்ட சேக்கிழார், அப்போது இல்லாவிட்டாலும் எப்போதாவது—சிறிதளவு பகுத்தறிவு உடையவராலாவது (இது போன்ற புரட்டுக்களை விளக்க நிறைந்த பகுத்தறிவு தேவையில்லை) தம்முடைய அறியாமை அம்பலத்துக்கு இழுத்துவிடப்படுமே என்றுகூட எண்ணிப் பாராமல்—ஒன்றை எண்ணிப் பார்த்து, அதன்பால் காணப்படும் நலம் தீங்குகளைக் கண்டறிந்து, அவற்றிற் கேற்பத் தம் கருத்துக்களை வெளியிடும் இயல்பினையும் பெறாத நிலையில் நின்று, சைவத்திற்குச் சிறப்புத் தேட முயன்ற சேக்கிழாரின் சிதைந்த அறிவைக் கண்டு—அவரும் ஒரு தமிழன் என்ற காரணத்தால், அவர்பால் எமக்குச் சினம் கலந்த இரக்கமே உண்டாகின்றது.

பொதுவாகவே, பொய் பேசுபவர்களும், புளுகுபவர்களும் கூடத், தங்களின் பொய்யையும் புளுகையும், தங்களால் எடுத்துக் கூறப்படும் கற்பனைக் கேற்ப, அதனைப் பிறர் ஓரளவுக் காவது நம்பும் முறையில், அளந்து அமைப்பார்கள். ஆனால் (நமது) சேக்கிழாரோ, தாம் கூற வந்த பொய்யையும் புளுகையும் ஆற்று மணல்போல் அள்ளிக்குவித்து விட்டார், தம்முடைய அவசர அறிவால். ஆற்று மணலை எண்ணி அளவிடமுடியுமா?

இனிச், சம்பந்தரால் நெருப்பில் இடப்பட்ட ஏடு எரியாமல் இருந்தது—ஒப்புக் கொள்ளுகிறோம்—நெருப்புச் சரிவர எரியவில்லை—அல்லது நெருப்பில் இடப்பட்ட ஏடு எரிய முடியாத அளவுக்கு அதனை மூடி அழுக்குப் படிந்திருந்தது என்பன போன்ற இயல்பாக உள்ள காரணங்களால். ஏன் இப்படிப் பட்ட காரணத்தைக் கூறுகின்றேன் என்றால், சைவ—வைணவ ஆலயங்களிலுள்ள கடவுள் வடிவங்களும் இப்படித்தான், அவை இன்ன வடிவம்—ஆணா? பெண்ணா? என்றுகூட அறிந்து கொள்ளமுடியாதபடி அங்குலக் கணக்கில் அழுக்கேறி வைக்கப்பட்டிருக்கும். அது போலவே, கடவுள் நிலையில் வைத்துப் போற்றிப் 'பேணப்

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

..] 15—12—46 [ஞாயிறு

# அட்லி

# ..ர்ணய சபை

[முதல் காட்சி]

★

..ட்லி நிர்ணய சபை, புது ..யில் கூடிற்று! அரசியல் ..ய சபை என்றுதான் நாட் .., நம்பப்படுகிறது, பேசப் ..றது. ஆனால், நாம் அதனை, ..லி நிர்ணய சபை என்று ..றித்துள்ளோம். அச்சுப் ..புமல்ல, கட்சி மாச்சரியத் .. அல்ல;- அந்த சபையின் .. என்ன ஆகும் என்பதை ..ராச் சிந்தித்துப் பார்த்தே ..ப் பெயரிட்டோம். அரசி ..நிர்ணய சபை புது டில்லி 9ந் தேதி காலை 11 மணிக் .. கூடிற்று. காந்தியார் ..லே இல்லை! ஜனாப் ஜின்னாவும் ..லை!

..பைக்குத் தலைமை வகித்த ..ர் பெயர் டாக்டர் சச்சிதா.. சின்கா. அவர் காங்கிரசில் ..லை! 1926லிருந்து, காங்கிர.. போக்கும் திட்டமும் பிடிக் ..தால், அதனை விட்டு விலகி ..!

..வர் தலைமையுரை யாற்றி.. ஆனால், அது, காங்கிரஸ் ..கள் கொண்டுள்ள இன்பக் .. இருக்கிறதே, இந்திதான் ..ய மொழி என்று, அந்தப் ..யிலே இல்லை—வெள்ளைக் ..னின் ஆங்கில மொழியிலே!

..ய அரசியல், சுயராஜ்யம் ..டி இருக்கவேண்டும்! அந் .. சாசனம் தீட்ட வேண்டு.. மானால், எந்தச் சாசனத்தை உதாரணமாக, வழி காட்டியாகக் கொள்ளவேண்டும் என்பதுபற்றித் தலைவர் டாக்டர் சின்கா ரசமான சொற்பொழி வாற்றினார்—அதிலே அமெரிக்க அரசியல்—சுவிட்ஜர்லந்து அரசியல்—பிரன்ச்சு அரசியல்—என்று பல்வேறு அரசியல் திட்டங்களைப் பற்றிய குறிப்பும் விளக்கமும் இருந்தது; காந்தியார் சிபார்சு செய்து, காங்கிரசாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ராம ராஜ்ய திட்டம் தவிர, மற்ற திட்டங்களைப்பற்றி எல்லாம் பேசப்பட்டது.

நம் நாடு—இந்தியா—என்ற நாட்டினைப் பற்றிப் புகழுரைகள் கூறப்பட்டன—ஆனால் பாரத் வர்ஷம்–பாரத தேவி–காணோம் அந்தப் பிரஸ்தாபம்!

தலைமை உரையில், கீதை, ராமாயணம் ஆகியவற்றிலிருந்து அல்ல, இக்பாலின் கவிதை, ஏசுவின் சுவிசேஷம், ஆகியவற்றிலிருந்தே மேற்கோள்கள் காட்டப்பட்டன.

தலைவர், காலை மட்டுமே வேலை செய்தார்—பிற்பகலிலே வேலை செய்யக்கூடாது என்று அவருக்கு டாக்டர் உத்தரவாம்!

தலைமை வகித்தவர், தற்காலிகர்! நிரந்தரத் தலைவராக ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்படி, அ. நி. சபை, பல 'ரசமான' சம்பவங்கள் கொண்டதாகக் காட்சி தந்தது. ரசங்கள் அனைத்தையும், ஐ. மா. விலிருந்து வந்த ஒருவர் தமது வீர ரசத்தால் தோற்கடித்து விட்டார்.

அவருக்கு, சாய் மேலே பொறுத்துள்ளவைகளைக் கண்டு கோபம் பேராற்றல் அவர் சாஸ்திரி காங்கிரஸ்காரர்போல், அ. நி. சபை என்றால், அது பாரத் வர்ஷத்துக்கு ராம ராஜ்யம் தயாரிக்கப்பாரத்மாதா தனைகொண்டு ராஷ்ட்ரீய பாஷையான இந்தியில் சகல காரியமும் நடைபெறும் சத்காரியமாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டவர். பெயர், R. V. துலேக்கார்.

அவர் ஆரம்பித்தார் தமது சொற்பொழிவை. "இந்த அ. நி. சபையின் விதிகள் திட்டங்கள் யாவும் இந்தியில்தான் எழுதப் படவேண்டும்; இந்தியில்தான் விவாதம் இருக்கவேண்டும்" என்றார். இந்தியில்தான் அவர் பேசினார்.

தலைவர், குறுக்கிட்டு, "ஆங்கிலத்தில் பேசுங்கள்" என்றார். "முடியாது" என்றார் அவர். இந்தியில். "சபையிலே இந்தி தெரியாதவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நீங்கள் பேசுவது புரியாதே" என்றார் தலைவர். காரணம் கூறியதோடு இல்லை. "இதோ பாரும், தோழர் ராஜகோபாலாச்சாரியார் இருக்கிறார். அவருக்கு இந்தி தெரியாது அவர் எப்படிப் புரிந்துகொள்வார், நீங்கள் இந்தியில் பேசினால்!" என்று கேட்டார். வந்தது சரியான கோபம் துலேக்காருக்கு. "அவர்கள் இந்துஸ்தானி தெரியாத துர்ப்பாக்கியமுடையவர்களாயிருந்தால், அ. நி. சபையிலே மட்டுமா, இந்தியாவிலேயே அவர்களுக்கு இடம் கிடையாது" என்றார். கூறிவிட்டு, மளமளவென்று ஆரம்பித்தார், "இங்கே பிரிட்டிஷ் முதலிய வெளிநாட்டு பாரா மன்றங்களை உதாரணம் காட்டிப் பேசப்பட்டது. அது தவறு. இங்கே இந்தியாவுக்கான அரசியல் திட்டத்தை, இந்திய மொழியிலே, இந்தியமனப்பான்மைக்கு ஏற்றபடி பேசித் தயாரிக்க வேண்டும்." என்றார். தலைவர், இவர் பேச்சுக்கு இடமில்லை முறை

Filmed as bound.

யாகாது என்று கூறித் தடுத்தார்.

"நான் பேசத்தான் செய்வேன்"

"பேசுவது பொருத்தமில்லை"

"நான் இந்தச்சபை மெம்பர். எனக்கு இங்கு பேச உரிமை உண்டு"

"நான் சபைக்குத் தலைவன். ஆகவே உம்மை ஒழுங்குக்குக் கொண்டுவர அதிகாரம் உண்டு"

இப்படித் தலைவருக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம்!

"உட்காருமய்யா!" என்று கொஞ்சம் காரமாகப் பேசலானார் தலைவர்.

திவான்சாமன்லாலும் பண்டித நேருவும், எழுந்துபோய், பேசிக்கொண்டிருந்த துலேக்காரை, ஆட்டைஓட்டிக்கொண்டு வருவதுபோல், அவருடைய ஆசனத்துக்கு அழைத்து வந்தனர். "ஆடு" என்று நாம் ஜுடுக்குத்தனமாகக் கூறுவதாக எண்ணிக் கோபிக்க வேண்டாம். SHEPERDED HIM BACK TO HIS SEAT என்பது 'இந்து' வின் வாசகம். (டிசம்பர் 11.)

"இத்யாதி" விசேஷங்களுடன், இந்தியாவின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கக் கூடினர். அ. நி. சபையில் விசித்திரம் இவை மட்டுமல்ல, இந்தச் சபையிலே முஸ்லிம் லீக் கலந்து கொள்ளாததால், சபையிலே ஒருபகுதி இடம் காலியாக இருக்கிறது. உலகிலே இதுவரை கூடிய அரசியல் நிர்ணய சபைகளெல்லாம், புரட்சிச் சின்னமாகவோ, புது உரிமை பூத்திடும் பூங்காவாகவோ விளங்கின. இங்கோ, இரு ஜாதி பேதம் நீக்கப்படாமல், சர்க்காரிலே பங்கு பெற்றும், சர்க்காரின் திட்டத்திலே முக்கியத்துவம் பெற்றும் உள்ள, லீக் ஒத்துழைக்காத நிலையில் கூடுகிறது. எனவே இதிலே, வைபவம், வேடிக்கை, வீரம், ஹாஸ்யம், சிருங்காரம், ஆகியவைகள் காணப்படும்; பலன் உண்டாகுமா? ஒரு கஷ்டமான, பெருமூச்சுத்தான் பதிலாகப் பெற முடியும்! ஏன்? இந்த அ. நி. சபை, உண்மை அ. நி. சபை அல்ல.

இந்த அ. நி. சபை என்று, கூறுவதன் பொருள் என்ன? விளக்குவோம் இனி. விளக்கு முன், கூறிவிடுகிறோம், இந்த என்ற பதத்தை உபயோகிப்பது நமது சொந்த விருப்பு வெறுப்பைக்காட்டும் குறியாகக்கருத வேண்டாம். பண்டித நேருவின் பதம், நாம் உபயோகிப்பது, அரசியல் நிர்ணயசபை கூட்டப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றவண்ணம் இருந்தன. அதிலே நாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று லீக் தெரிவித்தபடி இருந்தது—காங்கிரஸ் செய்ததென்ன?—யார்வந்தாலும் வராவிட்டாலும், சபை கூடியேதீரும் என்று தன்பலத்தைப் பிரசாரம் செய்தது—லீக்கை உதாசீனம் செய்யத் துணிந்து விட்டோம் என்பதைத் தெரிவித்ததே யொழிய, லீகுக்கும் காங்கிரசுக்கும் சமரசம் ஏற்படுத்தக் கூடிய சக்தியும் யுக்தியும் இருப்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

இந்தப் 'பிளவு' இருக்கும் போது, சபைகூடுவது, கசப்பையும் பேதத்தையும் மேலும்வளர்க்கத்தான் செய்யும், என்பதைப் பிரிட்டன் தெரிந்து கொள்ளவில்லையா—புரியாத விஷயமா? குழந்தையே, பெரியதோர் கலையாக்கிவிட்ட, ஏகாதிபத்யவாதிகளுக்கு இது நன்கு புரியும், புரிந்து, புரிந்தார்கள். நல்லெண்ணம் இருந்திருந்தால், சபை கூட்டுவது கொஞ்சம் நிறுத்தி

வைக்கப்பட வேண்டும், கு
நிலை கொஞ்சம் சரியாகட்டு
நேசம் வளரவழிஏற்படட்டும்
என்று கூறி இருப்பர், ஆ
ஏகாதிபத்யம்,உள்நாட்டுப்பி
களுக்கிடையில் "ஆப்பு" போ
றது தானே! ஆனந்தமடை
தது. அரசியல் நிர்ணய ச
கூட்டப்படுவதை நாங்கள் த
கப் போவதில்லை, என்று க
ற்று, காங்கிரசுக்கு ஒரு குவ
கருப்பஞ்சாறு கொடுத்த
பருக! ஒருபுறம் நவகாளி, ம
றோர்புறம் பீகார், இந்தநி
லேயா, எதிர்கால அரசியல்தி
டம் தயாரிக்கும் சபை கூ
வது!

கூட்டுவது என்றாகிவிட்ட
அதற்குப் பிரிட்டன் பக்கமே
மும் கொட்டியாகி விட்டது-
சரி, கூடட்டும், என்று பி
டன் வேறு வேலைகளைக் கவனி
த்துக் கொண்டிருக்கலாமல்லவ
அதுதான் இல்லை! வேறு வே
களை எல்லாம் ஒதுக்கிவைத்
விட்டு, தன் இயல்புக்கு ஏற்
வேலையில் ஈடுபட்டது. ஏதே
சபையோ கூடுகிறது! லீக்கே
கலந்து கொள்ளவில்லை. லீ
கலந்து கொள்ளாததை, சா
சாதாரணச் சம்பவமாக்கிவிட
கூடாதே — உலகுக்குத் தெ
விக்கவேண்டுமே—இரு கட்சி
கும் ஏற்கனவே உள்ள கசப்
மேலும் கொஞ்சம் அதிகரிக்
வேண்டுமே—அதைச் செய்
இதுதானே பொன்னான சமய
—இதைவிட்டு விடுவதா என்
எண்ணி, சபைகூடுவதற்கு நா
கள் சில இருக்கும் போது,லீ
காங்கிரஸ், சீக், பிரதிநிதிக
அழைத்துக்கொண்டு இலண்
டன் வருக! என்று வைசிரா
லேவலுக்கு உத்தரவிட்டது.

ஒரு பெரிய பூபாகத்தின் அ
சியலை நிர்ணயிக்கும் பொற
புள்ள தலைவர்களைக், கூப்பிட்
குரலுக்கு ஓடிவரச் செய்யு

ாக்கைமட்டுமல்ல நாம்கண்
ப்பது, அவ்வளவு கடைசி
ரத்தில், "மந்திராலோசனை"
த்துவது, எங்காவது பலன்
நுமா? பலன் ஏற்படவேண்டு
மன்ற நோக்கமிருந்தால்,
துவாமுறை? அதிக கூர்மை
ள புத்திகூடத் தேவை
ல்லை, இந்த அவசர அழைப்
லே புதைந்துள்ள ராஜதந்திரத்
த் தெரிந்து கொள்ள.

அழைத்தனர்! எதற்கு? என்று
ள்விபிறந்தது. எதற்குமில்லை
ன்பர்களே! கூட்டப்பட இருக்
ம் சபை, வெற்றிகரமாகநடை
ற எங்களாலான உதவி
ய்ய, யோசனைகூறவே அழை
க்றோம், என்று பிரிட்டிஷ்சர்க்
ர் தெரிவித்தது. அந்த அன்பும்
க்கரையும் அவ்வளவு அமோ
! திடீர் திடீரென்று சுரக்கிற
டிக்கையைக்கவனியுங்கள்.

பண்டிதநேரு, இலண்டன்
சன்றுபேச, என்னபிரச்னை
ருக்கிறது? நேரம் ஏது? அவ
ம் ஏன்? அரசியல் நிர்ணய
பை கூட்டப்படுவது இதனால்
டைப்படுமா? என்றெல்லாம்
ட்டவுடன், இலண்டன்
ாகப் போவதில்லை' என்று
ரிவித்தார்.

டனே, நாட்டிலுள்ள காங்கிரஸ்
கள் அவ்வளவும், இலண்
ன் போகக்கூடாது-அவசிய
ல்லை-வேண்டுமானால் லண்ட
க்கு லீக் காவடி எடுக்கட்டும்
காங்கிரஸ் போகாது—என்று
ழுதின.

அந்த வீரஉரைகளை எழுதி, மை
ருவதற்குள், ஏகாதிபத்யம்
றுமோர் "பாய்ச்சலை"யை
நட்டிற்று.

"நேருஜீ! தயவு செய்து வந்து
ாகக் கோருகிறேன். இங்கு
ருவதால், சபை கூடும் வேலை
டைப்படாது. சபை கூட்டப்
டுவதற்கு, தாங்கள் போய்விடலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம். வருக!" என்று, அட்லியிடமிருந்து நேருஜிக்குத் தந்திவந்தது.

உடனே 'சுருதி' மாறிவிட்டது. நேரு இலண்டன் போகிறார்—அட்லி வேண்டிக்கொண்டார்—என்று பாடலாயினர்.

அடிமைப்படுத்தப்பட்ட நாட்டு மனோபாவத்தை, பல நாடுகளை அடிமைப்படுத்திப் பழக்கப்பட்ட பிரிட்டன் நன்கு அறியுமல்லவா? சரியானசந்தர்ப்பம் பார்த்து, கொஞ்சம் அன்பு கலந்து, நல்ல வார்த்தை, தோத்திர ரூபத்திலேகூறி விட்டால், அடிமைப்பட்டுப்பட்டு நொந்து போன நாட்டுக்கு, அந்தவார்த்தைமிகமிக இனிக்கும். வெறும் ஏமாற்று வார்த்தையாக இருந்தால் கூடச்சரி, கேட்பதற்கு இனிப்பாக இருந்தால் போதும். ஏராளமான பாரம்ஏற்றப்பட்ட ஒட்டகம், இவ்வளவு சுமையை தூக்கிச் செல்வதா என்றெண்ணி, படுத்து விடுமாம் கீழே. அதன் எண்ணம், 'எஜமானனை' எதிர்ப்பது என்று. எஜமானன், எத்தனல்லவா? அவன் ஒட்டகத்தின் மீது ஏற்றப்பட்ட சாமான்களிலே, கடைசியாக ஏற்றப்பட்ட சாமானைக் கீழே இறக்கி விடுவானாம். ஒட்டகத்துக்கு ரொம்பத் திருப்தி. நாம் சுமையைத் தூக்கமுடியாது என்று முரட்டுத்தனம் செய்தோம் — எஜமானன் வழிக்கு வந்து விட்டான்—சாமானைக்கீழே இறக்கிவிட்டான் — வெற்றி நமக்குத்தான்—என்று சந்தோஷப்பட்டு, சரேலென எழுந்து நடக்குமாம்! பலநாட்களாக அன்னிய ராட்சியால், நமக்கு இந்த ஒட்டக சுபாவம் ஒட்டிக்கொண்டது — இதனை ஏகாதிபத்யம் நன்கு தெரிந்து, தட்டிக்கொடுத்து சில சமயம், புன்சிரிப்பு காட்டி வேலைவாங்குகிறது.

அட்லியின் பிரத்யேக அன்பழைப்பு இத்தகைய தந்திரத்திலே ஒன்று தான். அட்லியே வருந்திக் கூப்பிட்டதால் தான் எங்கள் நேரு போகிறார், என்று களிப்புடனும் பெருமையுடனும் கூறிக் கொள்ளக் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதே சந்தர்ப்பம், வரமுடியாது என்று கூறும் நேருவை, வெள்ளைக்காரன் வருந்தி அழைக்கிறான் பார்! என்றுகூறிக், கோபிக்க, முஸ்லிம்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தருகிறது. இருகட்சிக்கும் இடையே, "உருட்டுக்கண்" போக்கு, நீடிக்கிறது.

"அரசியல் நிர்ணய சபை கூட்டுவதைத் தடுப்பதோ, பிரிட்டிஷ் மந்திரிகள் தந்த திட்டத்தை நிறைவேற்றமலிருப்பதோ மாற்றுவதோ எங்கள் எண்ணமல்ல." என்று, அட்லி நேருவுக்குத் தெரிவித்தார்.

பண்டிதர், மகிழத் தானே செய்வார்—சபையும் கூடும்—மந்திரிகள் திட்டமும் நிறைவேற்றப்படும்-என்று பிரிட்டிஷ் முதலமைச்சர் கூறியது கேட்டு. சரி, என்று சீமைக்குப் பயணப்பட்டார்.

நேருவுக்கு அட்லி இங்ஙனம் நலங் கிட்டுக் கொண்டிருந்ததை, ஜனாப் ஜின்னா கவனித்தார். சும்மா இருக்க முடியுமா? சும்மா இருக்கும்படியாக வாவது அட்லி விட்டாரா? இல்லை! நேருவுக்கு அனுப்பிய கடிதத்தின் 'நகலை' ஜின்னாவுக்கு அனுப்பினார். ஜின்னா, உடனே சீமைக்குத் தந்தி அடித்தார்.

"நவம்பர் 29, இரவு 9 மணிக்கு, தாங்கள், பண்டிதநேருவுக்கு அனுப்பிய செய்தியின் நகல் எனக்குத் தரப்பட்டது. ஆனால், பண்டிதருக்கும் உங்களுக்கும் இடையே உள்ள கடிதப் போக்குவரத்து தரப்படவில்லை. சீமை வர நான் சம்மதிக்கும் போது இருந்த நிலைமை இதனால் மாறிவிட்டது. பண்டித நேருவுக்கு எழுதியதில் குறிப்பிட்டுள்ள விஷயமாக மட்டுமே சீமையில் பேசப் போவதாக இருந்தால், நாங்கள் வரவேண்டுவதில்லை, பூரா நிலைமை

யையும் விவாதிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலொழிய, சீமைக்கு நாங்கள் வந்து பயனில்லை. உடனே நிலைமையை விளக்குக!"

இந்தத் தந்தி ஜின்னாவிடமிருந்து கிடைத்ததும் அட்லி, பதிலளித்தார்.

"எல்லாவிதமான அபிப்பிராயங்களையும், முழுவதும், கவனிக்கவே கூடுகிறோம். நேருவுக்கு நான் அனுப்பிய தந்தியைத் தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டீர்கள். இலண்டன் வரவும்'—என்றார் அட்லி.

வேடிக்கை அல்ல—ராஜ தந்திரம்.

முக்கியமான பிரச்னை எதும் இல்லையே பேச! என்று நேரு கேட்டதற்கு, சபை சுமுகமாக நடைபெறுவதற்கான யோசனை பற்றிப் பேசவே அழைக்கிறேன்—சபையைத் தடுக்க அல்ல—திட்டத்தைக் குலைக்க அல்ல-என்று கூறினார். "இப்படி குறிப்பிட்ட விஷய விவாதம் மட்டும் நடத்துவதானால் நான் வரமுடியாது" என்று ஜின்னா கூறினதும், "பூராவிஷயமும் பேசத்தான் அழைக்கிறேன்" என்றார். விரும்பியவர்க்கு விரும்பியபடி! பக்தர்கள் எந்த ரூபத்தில் காண வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த ரூபத்தில் கடவுள் காட்சி அளிப்பார் என்கிறார்களே வைதீகர்கள்—அது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் முறை!

இன்று, இரு கட்சித் தலைவர்களின் மனதிலும் இரண்டு வேறு வேறு எண்ணமும் ஆசையும் எழச் செய்து, சீமைக்கு அழைத்தார் அட்லி.

சீமையிலே சமரச மாகாடு! இந்தியாவிலேயோ, "வாளை வாள்கொண்டு தடுப்போம்" என்ற பேச்சு! நாடக மேடையிலே, "நாதா! உன்னை விட்டுப் பிரியேன், மனம் சகியேன்!" என்று பாடும் சாவித்திரியை, சாரீரம் சரியில்லை என்பதற்காக, "இந்தச் சனியன் தொலைந்தால்தான் கம்பெனி உருப்படும்" என்ற சத்யவான் வேடம் தாங்கும் நடிகன், திரைக்குப் பின்புறமிருந்து கூறுவதுண்டு. சீமைச் சமரச முயற்சியையும், அதேபோது இங்கே நடைபெற்ற வீர உரைகளையும், ஒரு சேரப்பத்திரிகைகளில் படிக்கும்போது, நமக்கு, நாடகமேடைநினைவு படும்.

சீமை சென்றதோ சமரசத்துக்கு. சூழ்நிலை எப்படி அமைக்கப்பட்டது பாருங்கள். ஜின்னாவும் லியாகத்தும் தங்க ஒரு ஓட்டல்! நேருவும் பலதேவ் சிங்கும் தங்க வேறோர் ஓட்டல்!! பேசப் போன விஷயமோ, "சமரசம்!"

என்ன ஆயிற்று? என்ன ஆகும்? என்ன ஆகவேண்டுமென்று இந்தியாவின் விரோதிகள் எண்ணுவரோ அதுதான் நடந்தது—சமரசம் இல்லை—வட்ட மேஜை தோற்றது—நேரு திரும்பினார்—சென்றதே வீண் என்றார்.

கசப்பு அதிகரிக்க இதனால் முடிந்ததே தவிர காரியம் பலித்ததா? இரு கட்சிகளுக்கும் இல்லை! ஏகாதிபத்யம் வென்றது.

குறிப்பிட்ட ஒரு சமூக மக்கள், கலந்துகொள்ளவில்லை அரசியல் நிர்ணய சபையில்—ஆகவே அதிலே தீட்டப்படும் திட்டத்தை, ஏற்க மறுப்பவர், ஏற்க மறுக்கும் பகுதிகள்மீது நாங்கள் திணிக்கப்போவதில்லை.

என்று பிரிட்டிஷார், இந்தச் சமரச நாடகத்தை ஒட்டி வெளியிடுவதாக பாவனை செய்துகொண்டு, ஏகாதிபத்யத்தின் எண்ணத்தை வெளியிட்டு விட்டனர்.

என்ன அதன் பொருள்? அரசியல் நிர்ணய சபையில், லீக் கலந்தாலும் கலந்துகொள்ளாவிட்டாலும், அதைக் கூட்ட, நடத்த, அதிலே திட்டம் தீட்ட, விவாதிக்க, காங்கிரசுக்கு சுதந்திரம் உண்டு.

- அரசியல் நிர்ணய சபையிலே கலந்து கொள்ளவோ, விலகி இருக்கவோ லீக்குக்கு உரிமை உண்டு (சம எடை, அன்பு!)

திட்டம் தீட்டும் உரிமை காங்கிரசுக்கு—அதனைத் தீண்டமாட்டோம் என்று கூறும் உரிமை லீக்குக்கு—ஒரு குறிப்பிட்ட கட்சிக்குப் பிடிக்காத திட்டத்தைத் திணிக்கமாட்டோம், என்று கூறும் "உரிமை" எங்களுக்கு, என்று கூறுகிறது ஏகாதிபத்யம். வெற்றி யாருக்கு? ஆர அமர யோசியுங்கள், இளைஞர்களே!

திட்டம் தீட்டப்பட்டு, அது ஏற்றுக் கொள்ளப்படாமல் போனதால்,

அழகிய ஏடாகப் படிப்பகங்
உள்ளவைகள் ஏற்கனவே வாள

மயிலை அய்யங்கார் ஒரு சுய
சாசனம் தயாரித்தார்-புத்தகமாயி
பெசண்டம்மை தயாரித்தார்—
கமே அதுவும்! ஜவஹரின்
தயாரித்த நேரு திட்டமும்,
கதி! இப்படி மற்றுமோர் பு
தயாரிக்க மட்டுமே, அரசியல் நி
சபை பயன்படுகிறது! இதனை,
பத்யம் தெளிவாக்கி விட்டது.

திட்டம் தயாரிக்கப்பட்டு வி
—ஏற்றுக்கொள்ளச் செய்ய
டுமே! பிடிவை விட்டுவிடாத
டிஷ் ஏகாதிபத்யம், திட்ட
பத்துகோடி முஸ்லீம்கள் ஏற்க
பதால், அதனைத் திணிப்பது
நாயகத்துக்குக் கேடு என்று
அமுலுக்குக் கொண்டுவாமல்
கிறோம் என்பதை வருத்தத்
தெரிவித்துக் கொள்கிறோம்—
வெள்ளை அறிக்கை வெளியிடும்.

ஆக, நடைபெற்ற காரியம்
குப் பயன்பட்டது? சொல்வா
நினைத்தாலே, நம்மையு மறி
தலை கவிழுமே—வெட்கத்தாலும்,
கத்தாலும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே,
சியல் நிர்ணய சபை கூடுவது,
சிக்ரமிய சம்பவம்—விடுதலை
விட்டோம் என்று மகிழ வேண்
னோம், மவுடியோ என்று ச
கப்பட்ட தாய்க்குப் பிறந்த குழ
அம்மா! என்று அழைக்கும்போ
அந்தத் தாய்க்கு உண்டாகும்,
புக்குச் சமமானது, ஒன்றரை
ரண்டு அடிமைத்தனத்திலிருந்
தலை பெற்றதற்கு அறிகுறியாக
யல் நிர்ணய சபை கூடுவது.
டிப்பட்ட அபூர்வமான, வ
றிலே பொறிக்கப்பட வேண்
இந்த நிகழ்ச்சி, இன்று எப்படிப்
நிலைமையில் இருக்கிறது?

அரசியல் நிர்ணய சபையிலே
தம் இருந்தது— வந்தவர்கள்
ளரவினர்— என்று பத்திரி
பொறிக்கப்பட்டிருக்கிறது —
எழுத்தாள நண்பர்கள், வீக்த
என்ன? சபை கூடிவிட்டது!
எழுதிவிட்டனர்—ஆனால், சபை
ஒருபாகம் காலியாகத்தான் இ

றது. நாடகமேடை விளைவேமீண்டும் வரும். கொட்டகையில் ஒரு வரிசை காலியாகஇருந்தால், நாடகக்காரர், வெளியே பேசமாட்டார்,உள்ளுக்குள் விசாரம் இருக்கத்தான்செய்யும். ஒவ்வொரு நடிகருக்கும் இருக்கும்! ஆனால், வெளியே பேசும்போது அதைக்கூறமாட்டார், "கொட்டகையில் இன்ன பகுதி காலியாகவே இருந்தது, ஆனால் நாங்கள் கவலைப்படவில்லை. சிலர் வாராததால் நாடகம் நின்று விட்டதா? நாடகம் நடந்தது! என்று, சிரமப்பட்டுச் சிரித்துவிட்டுக் கூறுவார். அதுபோல் அரசியல் நிர்ணய சபையிலே ஒரு பகுதி காலியாக இருப்பதைக் கண்டு, மனம் புழுங்காமல்இருக்கமுடியாது—வெளியே கூறவும் முடியாது. சிக்கலான நிலைமை!

அரசியல் நிர்ணய சபைகூடுகிறது—ஆனாலும் பயமில்லை — அதிலே லீக் இல்லை—ஆகவே, திட்டத்தை நாம் தட்டிக்கழித்துவிடலாம் என்றுஏகாதிபத்யம் எண்ணிப்பூரிக்கிறது. யார் கலங்கவேண்டுமோ, யார் அஞ்சவேண்டுமோ, யாருக்குத் துக்கமிருக்கவேண்டுமோ, அவர்களுக்கு ஆனந்தம்! ஏங்கவேண்டிய ஏகாதிபத்யம் களிப்படைகிறது. ஒன்றுகூடிக் காரியமாற்றிஒப்பற்ற வெற்றியைப் பெறவேண்டிய நாம், உட்பகையைஒழிக்கவகையின்றி "நீ சொல்வதென்ன, நான் கேட்பதென்ன?" என்ற வீம்பு பேசுவதிலே களிப்பு அடைகிறோம். காலம்வீணாகிறது—கபடம் ஜெயிக்கிறது!

பிரிட்டிஷார், நாம் தயாரிக்கும் திட்டத்தை ஏற்கமறுத்தால் இறதிப் போராட்டம் நடத்துவோம்—என்று கூறலாம் காங்கிரஸ்அன்பர்கள். அது வீரத்திற்கு அறிகுறியாகுமேயொழிய, வெற்றியின் அறிவிப்பல்லவே! மீண்டும் போர் நடத்துவததான், சபை கூடிக்கலைந்த பிறகும் என்றால், ஏன், சபைகூடவேண்டும்? போர் ஆரம்பிக்கிறோம் என்றே வைத்துக்கொள்வோம், லீக்கும் காங்கிரசும் அப்போதும் பேதப்பட்டுதானே இருக்கும்? அதுபற்றிக்கவலையின்றிபோரிடுகிறோம், வெற்றியும் அடைகிறோம், ஏகாதிபத்பத்தையும் விரட்டுகிறோம் என்று வைத்துக்கொள்வோம், அந்த வெற்றிக்குப்பிறகும் உட்பகை ஒழிப்புக்கான போர் இருந்துதீருமே! இந்த நிலை வளருவது, நல்லதா? இதுதான் வாலிபர்களின் சிந்தனையாக இருக்கவேண்டும்! இதை எண்ணும்போது தான், மகத்தான சம்பவமாகவேண்டிய அரசியல் நிர்ணய சபைகூடும் காரியம், மனமாச்சரியத்தை மேலும் அதிகரிக்கச்செய்ய உதவுகிறதே என்றெண்ணி வருந்துகிறோம்.

கூட்டியாகிவிட்டது—இனிக்குறை கூறிப்பயனில்லை—ஆனால் சந்தர்ப்பம் இன்னமும் இருக்கிறது.

எழுச்சிதரும் சொற்பொழிவு, தலைவர் தேர்தல், முதலிய சம்பிரதாயக் காரியங்களே இப்போது நடைபெற்றன. மீண்டும் சபைகூடும்—வேலை செய்ய. இந்த இடைக்காலத்தைக், காங்கிரஸ், லீக்கைச்சந்திக்க, சமரசம் பேச, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அரசியல் நிர்ணய சபை, வீண்வேலையாக முடியாமல். கோரிய பலன் கிடைக்கவேண்டுமானால், காரியமாற்றும் கட்டம் வருவதற்குள், சபையில் 'காலி இடம்' இருத்தல்கூடாது. ஏகாதிபத்யத்தின் கண்களிலே மிரட்சி ஏற்படவேண்டுமானால், அந்தச் சபையிலே இன்று இருக்கிறதே ஓர் "இடைவெளி" அது தெரியக்கூடாது—இந்தச்சபை, காங்கிரஸ்—லீக்பேதத்தைப்பலப்படுத்தும் சபையாக மாறும்என்றநம்பிக்கையை நொறுக்கி, எங்களால், ஏகாதிபத்யத்துடன் போராடமட்டுமல்ல, உடன்பிறந்தோருடன், சமரசமாகப்போகவும்முடியும் என்பதை நிரூபித்துக் காட்டவேண்டும். அப்போதுதான், அரசியல் நிர்ணய சபைகூட்டியதற்கு அர்த்தம் உண்டு; இல்லையேல், மீரத் காங்கிரசுக்கும், டில்லி நிர்ணயசபைக்கும் வித்யாசம் இராது.

காங்கிரஸ் A. தொகுதிக்குமட்டும் வேண்டுமானால் திட்டம் தயாரிக்கலாமே ஒழிய, B. C. தொகுதிகளுக்குத்திட்டம் தயாரித்தால் ஏற்பவர் யார் என்று லீக்தலைவர் கேட்கிறார். இன்று நடைபெறும் அ. நி. சபை, வெறும் தமாஷா! என்று குறிப்பிடுகிறார்.

லீக்தலைவர் ஒருவர் அப்படிக்கூறும்போது, காங்கிரஸ் அன்பர்களுக்குக் கோபமாகஇருப்பது இயற்கை. ஆனால் கோபித்து என்னபயன்? லீக் தலைவர் கூறினதன் கருத்து இந்தச் சபை சவைக்கு உதவாது என்பதுதான். அது உண்மைதானே! திட்டத்தை நாங்கள், விரும்பாதவர்மீது திணிக்கமாட்டோம் என்று பிரிட்டிஷார் கூறிவிட்டனரே! அதற்குப்பிறகும் திட்டம் தீட்டிப்பயன் என்ன? இரண்டிலொன்று செய்தாகவேண்டும்.

1. நிறைவேற்றப்படும் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவருவோம்என்ற உறுதியையாவது, பிரிட்டிஷாரிடமிருந்து பெறவேண்டும்.

2. அல்லது, திட்டம் தயாரிக்கும் முன்பு, எப்படியாவது, லீகின் சம்மதத்தைப்பெறவேண்டும்.

இரண்டும் செய்யாமல்,லீகின்போக்கைப்பற்றியும் கவலையில்லை, பிரிட்டிஷாரின் இப்போதைய அறிக்கை பற்றியும் கவலையில்லை, சபை கூடிவிட்டது என்று கூறிப்பூரிப்படைவது என்றால், பூரிப்பு மிச்சமாகுமே ஒழிய, பயன் பூஜ்யமாகும். இதனை உணர மறுப்பது, உண்மையைக் காணமறுப்பதாகும். இதனை உணர்ந்தால், அந்த லீக் தலைவர் சொன்னதிலே தவறு இல்லை என்பது தெரியும். அப்படியும் தெரியவில்லை என்று கூறும் நண்பர்களுக்கு, பண்டித ஜவஹர் கூறியுள்ள ஓர் ஆழ்ந்தஆனால் மறைந்துகிடக்கும் அர்த்தமுள்ள ஓர் வாசகத்தைக் கவனப்படுத்துகிறோம்.

"இப்போது கூடும் அரசியல் நிர்ணய சபை, முடிவானது என்று கூறுவதற்கில்லை. வேறோர் அரசியல் நிர்ணயசபை கூட்டவேண்டியும்நேரிடலாம்" என்று பண்டிதநேரு. கூறினார்.

அதன் பொருள்என்னவாகஇருக்க முடியும்? எண்ணிப்பாருங்கள்—கோபதாபமின்றி—ஆர அமர—பிரச்னைகள் தீரவேண்டும் என்ற எண்ணத்துடன்—பேதம் ஒழியவேண்டும் என்ற உறுதியுடன் — பிளவுகளைக் கண்டு கேலி செய்யும் ஏகாதிபத்யத்தை நாம் ராஜதந்திரத்துறையிலும் தோற்கடித்தாகவேண்டும் என்ற உறுதியுடன், எண்ணிப்பாருங்கள், இவ்வளவு

கஷ்டப்பட்டுக்கூட்டும் இந்த அரசியல் நிர்ணய சபை போதாது, வேறோர் அரசியல் நிர்ணய சபை கூட்ட வேண்டிவரும் என்று பண்டிதநேரு, ஏன் கூறினார்?

இந்த அரசியல் நிர்ணய சபையிடம் எனக்கொன்றும் மோகம் இல்லை.

இதுதான் முடிவான அரசியல் நிர்ணயசபை என்று எவ்விதத்திலும் நான் கருதவில்லை.

இந்தியாவுக்கு மேலும் அதிகமான சுதந்திரம் கிடைத்தபிறகு, வேறோர் அரசியல் நிர்ணயசபைகூட்டவேண்டி வரும்.''

இவை, பண்டிதஜவஹர் மீரத்காங்கிரசில் பேசியவை. இந்து, நவம்பர் 22-ந்தேதிய இதழில் காணப்படுபவை.

இந்த வாசகங்களின் பொருள் என்ன?

கால மெல்லாம், இந்திய விடுதலைப் போரிலேயே கழித்தநேருவுக்கு, விடுதலைத் திட்டம் தயாரிக்கும் கருவி என்று கூறப்படும் அரசியல் நிர்ணய சபையிடம், ஏன் 'மோகம்' இல்லை. ஏதோ, தான் தேடிய பொருள் அல்ல, அது இன்னும் கிடைக்கவில்லை, ஏதோ, ஒன்று கிடைத்தது, இருந்தாலும் பரவாயில்லை என்ற போக்கிலே பேசுவானேன்? நண்பர்களே! "இந்த அரசியல் நிர்ணய சபையிடம்.'' என்று பண்டிதர் கூறினதன்பொருள் என்ன? இந்த என்ற பதத்துக்குள் புகுந்துள்ள கருத்து என்ன? இதுதான் முடிவான சபைஎன்று நான் எண்ணவில்லை—இதுவும் நேருவாசகம். முடிவான சபை வேறு இருக்கிறது என்று ஏற்படுகிறதே! அதுஎது? இது ஏன் அதுவாக இல்லை!

லீக் வந்தாலும் வராவிட்டாலும் சரி—இது, இந்த அரசியல் நிர்ணய சபை. ஆகவேதான், விடுதலையை விரும்பும் நேரு, இந்த சபையிடம் எனக்கொன்றும் பிரமாத மான ஆசை பிறந்து விடவில்லை என்று கூறினார்.

லீகும் இதிலே கலந்து கொண்டது—என்று கூறும் படியான நிலைமை ஏற்பட்டு அப்போது கூடும் சபை தான் முடிவானது. ஆகவேதான், இதனை நான் முடிவான சபைஎன்று கருதவில்லை என்று நேருகூறுகிறார்.

இப்படிப்பட்ட சபையினால், அதாவது லீக்கலந்து கொள்ளாததால், முடிவானசபை என்ற நிலையை அடைய முடியாதிருக்கும் இன்றைய அரசியல் நிர்ணயசபையினால், கிடைக்கக் கூடிய பலன் இந்தியாவின் பரிபூரணவிடுதலையாக இருக்க முடியாது என்பதைப் பண்டிதர் உணருவதாலேயே மேலும் விடுதலை இந்தியாவுக்குக்கிடைக்கும் போது, வேறோர் அரசியல் நிர்ணயசபைகூடும் என்று கூறுகிறார்.

இந்த அரசியல் நிர்ணயசபையின் நிலைமை, என்ன என்பது பற்றி, இப்போது எண்ணிப்பார்க்கக் கேட்டுக் கொள்கிறோம். லீக் தலைவரொருவர் இதுவெறும் நாடகம் என்றார்—கோபம்வருகிறது—சரி—அவர் சொன்னதைத் தள்ளிவிடுங்கள்—ஏன், பண்டிதநேருவே, இந்த அரசியல்நிர்ணய சபை போதாது, என்றுகருதுகிறார்? ஏன் என்றால், பண்டிதர், பல்வேறு நாட்டு வரலாறுகளை நன்கு அறிந்தவரானகாரணத்தால், இந்திய பூபாகத்தில், பலமாகாணங்களிலேபெருவாரியாக ஒன்று சேர்ந்து வாழ்பவர்களும் ஒரு அரசியல் கட்சியின் கொடியின் கீழ் கட்டுப்பாடாகத் திரண்டுவிட்டவர்களுமான பத்துகோடி முஸ்லீம்களால் நிராகரிக்கப்படும் ஒரு அரசியல் திட்டம் நிரந்தர ராணுவ ஆட்சியோ, உலகம் கண்டிராத பலமான சர்வாதிகாரமோ, அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கூட்டுறவோ, இன்றி, அமுலுக்கு வரமுடியாது என்பதைத் தெரிந்து பேசுகிறார். அவர் தேச பக்தியுடன், பலதேச சரிதங்களையும் படித்தவர்!

★

## ரங்கோன் ராதா

10-பக்கத் தொடர்ச்சி

தைத் தின்றாயே, ரோஜாவின் அருமை தெரிந்தால் செய்வாயா இப்படி? உனக்கு ஏது அந்த யோக்யதை! நான் அந்தக்கழுதையிடம் சொன்னேன், ரோஜாவை அம்மாவிடம் கொடடா என்று கழுதை, உன்னிடம் கொடுத்துத் தொலைத்தான் போலிருக்கு, நீ அதை இப்படிப் பாழாக்குகிறாய். இப்படிப் பாழாக்கினாலும் ஆக்குவது, சின்னம் மாவுக்குத் தருவதில்லை என்ற அளவுக்குக் கொட்ட எண்ணம், இந்த வயசில்'' என்று கூறினார். பாவம் அந்தப்பெண் பதறினாள், கதறினாள். அதுமுதல் தகப்பனுக்கும் மகளுக்கும் சரியானபடி பேச்சுவார்த்தை கிடையாது. அந்தப் பெண் அழுதபடிகிடந்தாள். பலர், இது மாற்றாந்தாய்க்கொடுமை என்று எண்ணினார்கள். நான்கூட அப்படித்தான்எண்ணிக்கொண்டேன். ராதாதான், நடந்ததுஎன்ன என்று அந்தப் பெண்ணிடம் பேசி இந்தச் சூட்சமத்தைத் தெரிந்து எனக்குக் கூறினாள்.

(தொடரும்)


காஞ்சிபுரம் டிஸ்டிரிக்ட் முன்சீப்பு கோர்ட்டு.

O. S. No. 394-46.

காஞ்சிபுரம் ஸ்ரீவிஜயலட்சுமி & கோ By its one of the Partner

K. வெங்கடேசலுநாயுடு—வாதி

பள்ளிபாளையத்தில் இருக்கும் Minerva Handloom textile கம்பெனிக்காக ஷை கம்பெனியின் Partners சையத்காசிம் சாயபுவகையரு —பிரதிவாதிகள்.

ஷை கேசு 1முதல் 3-வரை பிரதிவாதிகளுக்குத் தெரிவிப்பது யாதெனில் வாதிகணக்கு பாபத்துபாக்கி ரூ. 1656—13—1க்கும் பின்னிட்ட வட்டி செலவிற்கும் தாவா செய்து 9—1—47ல் இக்கோர்ட்டில்வாயிதா போட்டிருக்கிறது. இதுவிஷயம்எதாகிலும் ஆட்சேபனை யிருந்தால் ஷை வாயிதாதினம் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளவும். தவறினால் ஒருதலையாகத்தீர்மானிக்கப்படும் என்பதறியவும். K. R. விஸ்வநாதஐயர்

வாதிவக்கீல், காஞ்சிபுரம். 12-12-46

# ★ ரங்கோன் ராதா ★

★

சேனமியன்.

சாதாரணமாக, ஆடவர்கள், கலியாணமாவதற்கு முன்பு, கெட்டு அலைவதுண்டு; பருவச் சேஷ்டை காரணமாக, ஏதேதோ விதங்களிலே உடலையும் மனதையும் பாழாக்கிக் கொள்வதுண்டு; பித்தளையைப் பொன்னென்றும், காடியைக் கனிரசமென்றும் கொள்வதுண்டு. அப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டோ, கேட்டோ, வீட்டிலே பெரியவர்கள், சரி சரி, பையனுக்கு வயதாகி விட்டது, ஒரு கால் கட்டு கட்டிப் போட்டால்தான், வாழ்க்கையில் படிந்து இருப்பான்; இந்தச் சமயத்திலே, அவனைக் கண்டிப்பதோடு மட்டும் விட்டுவிட்டால், அவன், நமது கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு, கண்டபடி ஆடிக் கெடுவான், ஆகவே அவனுக்கு விரைவில் ஒரு கலியாணத்தைச் செய்துவிடவேண்டும் காலா காலத்திலே செய்ய வேண்டிய காரியத்தைச் செய்தால் தான் எதுவும் வழியாக வரும், என்று பேசுவார்கள்; பையனுக்கு நல்வார்த்தை கூறிக்கொண்டிருக்கும் போதே, நல்ல இடமும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். கப்பலுக்கு நங்கூரம் போடுவதுபோல, வாழ்க்கைப் படகை வழி தவறிச்செலுத்தாமலிருக்க, ஒரு கட்டு திட்டம் என்றுதானே கலியாணத்தைக் கூறுவார்கள். அதுபோல, பெரும்பாலும், ஆடவர்கள், கலியாணமானதும், எப்படியோ, தமது பழய நடவடிக்கைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொண்டு, பழய சினேகிதர்களிலே கூடச் சிலரை ஒதுக்கிவிட்டு, புதிய முறையை ஆரம்பிப்பதைத்தான் நான் பார்த்திருக்கிறேன். பெட்டியிலிட்ட பாம்புபோலாகிவிட்டான் பார்த்தாயா, மாலை வேளைகளிலே மாகதத்தின் வீட்டிலேயே கிடப்பானே, இப்போது பார்த்தாயா, எவ்வளவு அடக்க ஒடுக்கமாகி விட்டான்; அந்தத் தெருப்பக்கமே காணவே போவதில்லை, என்றெல்லாம் பேசுவார்கள், "எங்கே சார்! உங்களைப் பார்க்க முடிவதில்லை இப்போதெல்லாம்?" என்று ஒரு நண்பர் கேட்டால், புதிதாக மணமானவர் புன்சிரிப்புடன், பதில் என்ன கூறுவதென்று தெரியாமலேயிருப்பார். வேறோர் நண்பர், "அவர் எப்படி முன்போல இருக்கமுடியும்? நம்மைப் போல அவர் என்ன ஒண்டிக் கட்டையா? அவருக்குக் கலியாணம் ஆகிவிட்டது, இனி எப்படி அவர், நம் கண்ணிலே அடிக்கடி படமுடியும்" என்று கேலி பேசுவார்.

கலியாணம் செய்துகொள்ளுமுன், கண்ணையும் கருத்தையும் கெடுத்துக் கொள்ளும் ஆண்களே அதிகம், மண அறையில் வரும்வரை பிரம்மச்சாரியாகவே இருந்தவர் என்று உறுதியாகக் கூறக்கூடியநிலையில், ஆயிரத்திலொரு ஆடவர் தேறுவாரோ என்னவோ! ஆனால் எப்படிப்பட்ட அலைச்சல்காரரும், கலியாணமானதும், கொஞ்சம் திருந்திவிடுவதைத்தான் சாதாரணமாகப் பார்க்க முடியும். சிலது உண்டு, கலியாணமான பிறகும் பழய குருடியாக உள்ளவர்கள். உன் அப்பாவின் போக்கோ தனி ரகமாக இருந்தது. அவருக்கு, மோக வெறி, பருவம் கடந்து ஏற்பட்டது, எனவே தான் அளவுக்குமீறிப்போகலாயிற்று. ஆகவேதான் சிந்தாமணி-சிந்தாமணி-என்று சதா, பஜனை செய்து கொண்டிருந்தார். நம்ம ராதா ஒருகதை சொல்வாள், யாரோ ஒருபெரிய வீராதிவீரனும், உலகையே ஜெயித்து ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும் என்று எண்ணினனும், பல தேசங்களையும் ஜெயித்தானும், புகழ் ஓங்கிவளர்ந்ததாம்; அப்படிப்பட்டவனுக்கு, முதியபருவம் வருகிற நேரத்தில், ஒரு அழகு ராணியிடம் அமோகமாக ஆசைபிறந்ததாம்; அதனை அறிந்துகொண்ட அந்தராணி, அசகாயச் சூரனைத் தன் அடிமையாக்கிக் கொண்டாளாம். கடைசியில் அவன் ராஜ்யம், ரணகளம், கீர்த்தி,முதலியவற்றை எல்லாம் மறந்து அவளிடம் கொஞ்சிக்குலாவிக் கொண்டிருப்பதே வேலையாகக் கொண்டு, அதன் பயனாக, செல்வாக்கையும் மதிப்பையும் இழந்தானும். பெயர், என்னமோ ஜூலியஸ் சீசர், என்று சொல்வாள். அதுபோலக் கொஞ்சம் வயதானபிறகு, இந்தக்காதல் நோய் ஏற்பட்டால், அதைத் தீர்த்துக்கொள்ளும் மருந்தும் கிடைப்பது கஷ்டம், மருந்து கிடைத்தாலும், சுலபத்திலே வேலை செய்யாது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே அதுபோல, முதிய பருவத்திலே மோகம் பிறந்தால் அதன் வேகத்தைத் தாங்கமாட்டாமல், அவர்கள் நிலையையே இழந்துவிடுமளவு ஆடுவர். உன் அப்பாவுக்கும், அந்தக்கதிதானோ என்று நான் அஞ்சினேன். இவளெவளோ, சிந்தாமணியாம்! தங்கத்திடம் கொண்ட ஆசையாலே அவர் என்னை இவ்வளவு பாடுபடுத்தினர். இன்னம் சிந்தாமணியும், வந்துசேர்ந்தால், தீர்ந்தது, என்கையில் திருஓடு கொடுத்துத் துரத்தியும் விடுவார்கள் என்று பயந்தேன். சொல்ல முடியாது, மகனே! மோகத்தால், பிடித்தாட்டப்படும் ஆடவர்கள், எவ்வளவு மோசமாக நடக்க ஆரம்பிப்பார்கள் என்பதை அளவறிந்து கூறமுடியாது — சொந்தமகன், மகள், அண்ணன் தம்பி, ஆகியோரையும், தன்னிடம் பிரியமுள்ள ஊழியர்களையும் உதாசீனம்செய்யத் துணிவார்கள். பழய பாசம் நேசம் அவ்வளவும் பாழாகும், கவலைப்பட மாட்டார்கள். எது வந்தாலும் சரி. எதுபோனாலும் சரி என்று துணிந்து விடுவார்கள். யார் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும்;

எண்ணிக்கொள்ளட்டும், என்று மனதை மரக்கடித்துக் கொள்வார்கள். மகனே! இரண்டாந் தாரம் செய்துகொண்ட குடும்பத்திலே வளரும் பிள்ளைகளிலே பல, கொடுமைக்குஆளாவதைப் பார்க்கிறோமே, மாற்றாந்தாய்க் கொடுமை என்று அதனைக்கூறுவார்கள், ஆனால் குற்றம், அந்த இரண்டாம் மனைவிமீது அதிகம் இராது, ஆடவன்மீதுதான் இருக்கும். அதைக் கூர்ந்து கவனித்தால்தான் தெரியும்—புரியும். ரங்கோனில் அப்படித்தான், எங்கள் பக்கத்து வீட்டிலே, ஒரு பிள்ளை இருந்தார், அவருக்கு வயது வந்த ஒரு பெண். மனைவி இறந்துவிட்டாள். மறு கலியாணம் செய்துகொண்டார். கொஞ்ச நாட்களுக்குள், அவருடைய மகள், கண்ணீர் விடலானாள். மாற்றாந்தாய்க் கொடுமை என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன். படுபாவி, எங்கிருந்தோ ஒருவள் வந்து சேர்ந்தாளே, குழந்தையின் வாழ்க்கையைப்பாழ்படுத்த என்று கூடச் சபித்தேன். ராதா தான் சூட்சமத்தைக் கண்டறிந்து சொன்னான், கொடுமை அவளால் உண்டாகவில்லை, அந்த ஆடவனாலேதான். ஒரு சம்பவம், கேள்; ராதாதான் சொன்னான். ஒருநாள், அவன், ரோஜாச் செண்டு வாங்கி அனுப்பினானாம் வீட்டுக்கு, வேலைக்காரனிடம். அதனை, யார் எடுத்துக் கொள்வது என்று, சிக்கல் வந்துவிட்டது மாற்றாந்தாய்க்கொடுமைக்காரி என்கிறோமே, அவள்தான் அன்புடன், அந்தச் செண்டை, பெண்ணுக்குக் கொடுத்தாளாம் பெண் பயந்து கொண்டே அதைப் பெற்றுக்கொண்டாள். பிறகு, அவன் வீட்டுக்கு வந்திருக்கிறான் பெண்ணின் ஜடையிலே ரோஜா இருந்ததைக் கண்டான்—முகம் மாறிவிட்டது. அவ்வளவு விரைவிலே அவன் மனம் கெட்டுவிட்டது. பெண்கள் விஷயந்தானே என்று விட்டுவிட்டானா? அதுவுமில்லை. கிளறத் தொடங்கினான். இரண்டாந்தாரமாக வந்த பெண், ரோஜாவையும் மறந்துவிட்டாள், அதை யார் வைத்துக்கொள்வது என்று சர்ச்சை நடந்ததையும் மறந்துவிட்டாள். ஏதோ வேறு நினைவிலே இருந்தாள், புருஷனோடு பேசவில்லை. இந்தப் புருஷன், நாடகத்திலே, கதையிலே வருவதுபோல, தன் மனைவி சிரித்துக் கொண்டே தன் எதிரில் வந்து நின்று, "பிராணநாதா! தாங்கள் அன்புடன் எனக்களித்த மலரை நான் பிரியத்துடன் என் பின்னலிலே வைத்துக் கொண்டிருக்கிறேன் பாரீர்" என்று கூறிக் கொஞ்சுவாள், என்று நினைத்தான் போலும். கடையிலே ரோஜா மலர் வாங்கும்போதே அவனுக்கு அந்த நினைப்பு இருந்திருக்கும். வயதானவனல்லவா! தான் வாங்கி அனுப்பிய ரோஜாவை, தன் மகள் சண்டைபோட்டுத் தனக்கென்று எடுத்துக் கொண்டாள், அதனாலேயே, தன் மனைவி தன்னிடம் சரியாகப் பேசக்கூட இல்லை என்று இவன் தவறாக எண்ணிக்கொண்டான். மனதிலே இந்தத் தப்பெண்ணம் கொண்டதும், கோபிக்கவும் ஆரம்பித்தான். தன் மனைவியின் மனதை மகிழச் செய்ய வேண்டுமானால், மகளை அவள் எதிரில் கண்டித்தாக வேண்டும், என்று இவனாகத் தீர்மானித்துக் கொண்டான். பாவம், அந்தப் பெண், இவனுடைய இரண்டாந்தாரமே, இவனுக்குக் கலகமூட்டவுமில்லை, அவளுடைய மனதிலே, அவ்விதமான எண்ணமே கிடையாது. இவனாக, அவளுக்கு இன்னது தான் திருப்தியாக இருக்கும் என்று, எண்ணிக்கொண்டான் உடனே, தன் மகளிடம், அநாவசியமாகக் கோபித்துக்கொண்டான். ஏன் இப்படி கத்துகிறாய்—கழுதை மாதிரி—நாய்களுக்குப் புத்தியே கிடையாது—சனியனைத் தொலைத்து விடலாம் என்றால், எந்தத் தடியனும் கிடைக்கவில்லை, என்று இப்படிப் பேசினான். அந்தப் பெண்ணின் மனம் என்ன பாடுபடும். தன்னிடம் தன் தகப்பனார், ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறார், நாம் ஒரு தவறும் செய்யவில்லையே என்று அந்தப் பெண் யோசித்தாள். ஒரு காரணமும் தெரியவில்லை. தெரியாததால், அவளுக்கு ஒரு சந்தேகம் பிறந்தது. ஒரு வேளை, மாற்றாந்தாய், ஏதாவது கலகமூட்டி விட்டார்களோ என்று எண்ணினாள். அப்படியும் அவளுக்குக்கோபம் வரும்படியான காரியமும் ஒன்றும் செய்யவில்லையே, ஏன், கலகமூட்டப்போகிறாள் என்றும் எண்ணிப் பார்த்தாள். அதே யோசனையில் ஈடுபட்டிருந்த போது, ரோஜா, ஜடையிலிருந்து நழுவிக் கீழேவிழுந்தது. உடனே அதை எடுத்து மறுபடியும் செருகிக் கொள்ளலானாள். செருகுவதற்குமுன்பு, ரோஜாவில் இரண்டோர் இதழ்களைக்கிள்ளிவாயில் போட்டு மென்றாள்—சின்ன பெண்தானே — விளையாட்டாகச்செய்தாள். எங்கள் ராதா, ரோஜா ரோஜாவாகவே கூடத் தின்று விடுவாள். இந்தப் பெண் இரண்டு இதழைக் கிள்ளினது தான், பார்த்துக் கொண்டே இருந்த தகப்பன், பளார்பளார் என்று கன்னத்திலே அடித்து விட்டானாம். அந்த அடிகூட அல்ல அந்தப் பெண்ணுக்குத் துக்கம் தந்தது. அடித்துக் கொண்டே அவன் சொன்ன வார்த்தைதான் அவள் உயிரையே துடிக்கச் செய்தது. "சனியனே! ஆடு தழையைத் தின்பதுபோல ரோஜா புஷ்பத்

(8-ம் பக்கம் பார்க்க)

## அற்புதம்

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

...டுட் தேவாரத்திற்கும் ஒருகால் எண்ணெய்க் காப்பு முதலியன சாத்தி அழுக்கேற்றி வைக்கப் பட்டிருந்திருக்கும்; அதனால், அது, நெருப்பை நெடுந்தூரம் செல்லும்படி விலக்கியும் இருக்கலாம். ஆனால், சமணர்களால் நெருப்பிலிடப்பட்டதாகச் சொல்லப்படும் ஏடு, எரிந்து சாம்பராயிற்றென்று கூடக் கூறுவல், சமணர்கள் சாம்பரைத் தடவித் தடவிப் பார்த்தார்கள்—பிசைந்து பிசைந்து பார்த்தார்கள்—தூற்றித் தூற்றிப் பார்த்தார்கள்—இவ்வளவு ...ருகியது போதாதென்று, 'அரித்து அரித்துப் பாருங்கள்' என்று பாண்டியன் கூறியதாக ஒரு படி கட்டிய பொய்யையும் கூறித் தம்முடைய அறியாமைக்குத் துணையாகப் பாண்டியனுடைய அறிவையும் அலங்கோலப்படுத்திய குன்றத்தூராரின் குறைமதியை என்னென்பது!

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என்பதுபோல், சம்பந்தரின் ஏடு எரியாமல் இருந்தது என்பதை மெய்ப்பிக்க எண்ணிய சேக்கிழார், சமணர்களின் ஏடு எரிந்தொழிந்தது என்பதற்கு இத்தனை தொல்லைப்பட நேர்ந்ததே என்பதை எண்ணும்போது எமக்குக் கவலையும் வெட்கமும் கலந்துண்டாகின்றது. சம்பந்தருடைய சைவத்திற்கு உயர்வு கற்பிக்க முயன்ற சேக்கிழார், நெருப்பை அறிந்து தொட்டாலும், அறியாது தொட்டாலும் அதற்குச் சுடுந்தன்மையே யன்றித், தன்னைத் தொட்டவரையோ, அன்றித் தன்னிடத்துப்போடப்பட்ட பொருளையோ குளிர்ந்து மிளிரும்படி செய்யாதென்ற சாதாரண உண்மையைக்கூட மக்கள் தெரிந்துகொள்ளமாட்டார்களா என்ற நினைப்பையும் இழந்து, சைவத்திற்கு அற்புதம் கற்பித்த அழகினைப் பாரீர்!

இனிச், சைவத்தின் உயர்வுக்காகச் செய்யப்பட்ட மூன்றாவது சோதனையானநீரில்செய்து காட்டப்பட்ட நிகழ்ச்சிதான் மிகவும் வேடிக்கையானது. சம்பந்தர், 'வாழ்க அந்தணர்' என்னும்தேவாரத்தை ஒரு ஏட்டிலெழுதிஅதனைவைகையாற்றிலே விட்டார்; அந்தஏடு எதிர்நோக்கி, நீரைக்கிழித்துக்கொண்டு சென்றதாம். சமணர்களால் விடப்பட்ட ஏடு தண்ணீரால் அடித்துக்கொண்டு போகப்பட்டுக், கடலிற்போய்ச் சேர்ந்ததாம். சம்பந்தரால் விடப்பட்ட ஏடு ஆற்றை எதிர்நோக்கிச் சென்றதென்ற புதுமை எப்படிப்பட்டது பாருங்கள். மணலைக்கயிறு கத்திரித்து, அதனை ஒரு ஏணியாக அமைத்து, அதில், இருகால்களுமற்ற முடவன் ஏறி வான்வெளியிற் சென்று, அங்குள்ள தடாகத்திலிருந்த தாமரை மலரைப் பறித்துக்கொண்டு வந்தானும் என்பதற்கும் ஆற்றில் விட்ட ஏடு எதிர்நோக்கிச் சென்றதென்பதற்கும் யாதாயினும் வேறுபாடு காணமுடியுமா? எண்ணிப்பாருங்கள்.

## ஜாதிபாகுபாடு வேண்டாம்

மலாயாவிலுள்ள ஹிந்து ஆலய பரிபாலனஸ்தர்கள் ஆலய வழிபாட்டில் ஜாதி வித்தியாசங்கள் பாராட்டாமல் எல்லா ஹிந்துக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்றும், ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள மயானங்களிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் எல்லா ஹிந்துக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமெனவும் சென்றவாரம் கோலாலம்பூரில் நடந்த அகில மலாயா ஆலயநிர்வாகிகள் மாநாட்டில் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது இத்தீர்மானங்களைச் செய்ய முன்வந்த அகில மலாயா ஆலய நிர்வாகிகளை நம் பாராட்டாமல் இருப்பதற்கில்லை. தலைகீழ்புரட்சியான சமூக சீர்திருத்தங்கள் நடந்தேறி வரும் இக்காலத்தில் மேலே குறிப்பிட்ட தீர்மானங்கள் சாமான்யப்பட்டவைகளாகவே தோன்றும். என்றாலும் அந்த சாமான்ய தீர்மானங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால் ஹிந்துசமுதாயத்திற்குக் கௌரவமாக இருக்கும். இந்நாட்டில் ஹிந்துக்களில் தாழ்ந்தஜாதியார் என்று சொல்லப்படுகிறவர்களை மனப்பூர்வமாய் யாரும் அனுமதிப்பதில்லை. உடை, நடை, மாற்றங்களாலும், சமய சந்தர்ப்பங்களை ஒட்டியும் தாழ்ந்தஜாதி என்று சொல்லப்படும் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஹிந்து ஆலயங்களில் நுழைகிறார்களேயொழிய ஹிந்துக்கள் யாவரும் ஹிந்து ஆலயங்களில் நுழைந்து வழிபாடு செய்யலாம் என்ற பொது நியதி கிடையாது. இதன் காரணமாகவே மலாயாவில் எங்கு பார்த்தாலும் சிறுதெய்வ வணக்கங்கள் பெருகிக்கிடக்கின்றன.

ஆலயங்களைவிட மயான விஷயம் இன்னும் விபரீதமானது. உயர்ஜாதி ஹிந்துக்களின் பிணங்களைப் புதைக்கவோ, எரிக்கவோ தாழ்ந்த குலத்தினர் என்று அந்த உயர்ந்த ஜாதி ஹிந்துக்களால் கருதப்படும் "வெட்டியானும்" "பரியாரியும்" உதவி செய்ய வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் அந்த உதவியாளர்களான தாழ்ந்தகுலத்தினர்களின் பிணங்களைப்புதைக்கவும், எரிக்கவும், உயர்ஜாதி ஹிந்துக்களின் மயானங்கள் இடங்கொடுப்பது பெரிய பிரச்னைக்கும், தகராறுகளுக்கும், சிலசமயங்களில் அடிதடிகளுக்கும் இடமாகிவிடுகிறது. அதனால்தான் இந்தவித்தியாசங்களைப் போக்க முயன்றிருப்பவர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

'தமிழ்முரசு'

# இந்தோ சீனாவின் இணையற்ற தலைவர்

சென்ற ஒரு வருஷமாக இந்தோ சீனாவில் நேரிட்டு வந்த புரட்சிகள் நெருக்கடிகள் தாறுமாறான அரசியல் நிலை முதலியவைகளுக்குமிடையே திடமான மன உறுதி பெற்று, இந்தோ சீனாவின் எதிர்காலத்தை சோபிதமடையச் செய்யக்கூடியவராய் விளங்கி வந்தவர் ஹோ-சி-மின்.

வியட்நாம் சபையின் தலைவரான ஹோ-சி-மின் பிரஞ்சு சர்க்காரின் ஆசியாப் பிரதேசங்களிலுள்ளவர்களின் உரிமைக்காக அரும்பாடு பட்டவர்.

6 மாதங்களுக்கு முன்பு சர்க்காரால் வெகு தீவிரமாக வெறுக்கப்பட்ட ஹோ-சி-மின் இன்றைக்கு பிரெஞ்சு சர்க்காரின் விசேஷ மரியாதைக்குரிய விருந்தாளியாக நடத்தப்படுகிறார். பிரஞ்சு சர்க்காரின் யூனியனில் இந்தோ சீனாவும் ஒரு அங்கம் வகித்து, அதற்குரிய சுதந்திர ஆட்சி நடத்தலாமென்று கூறும் பிரெஞ்சு சர்க்காரின் யோசனை சம்பந்தமாக ஆலோசனை கூற பாரீஸாக்குச் சென்றிருக்கிறார் இப்பொழுது ஹோ-சி-மின்.

## புரட்சியே லட்சியம்

புரட்சியையே தொழிலாகக் கொண்டவர் தாம் என்று அடிக்கடி ஹோ-சி-மின் கூறுவாராம். புரட்சியைப் பற்றி அறிந்து கொள்வதிலேயே அவர் தமது வாழ்நாளில் ஏறக்குறைய 40 வருஷங்களைச் செலவிட்டிருக்கிறார். உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்து, ஆங்காங்குள்ள அரசியல் வாதிகளையும், புரட்சி வீரர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஹோ-சி-மின்னின் புரட்சி மனப்பான்மையை பிதிரார்ஜிதம் என்று கூறலாம். அவருடைய பிதாவை, புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காரணத்திற்காக குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறும்படி இந்தோ—சீனா சர்க்கார் ஆக்ஞை பிறப்பித்ததே, ஹோ-சி-மின்னை ஒரு தீவிர புரட்சிக்காரராக மாற்றியது எனலாம்.

பாரீஸ் நகரில் மூன்று வருஷங்கள் வாசம் செய்து மேனாட்டு அரசியல் விவகாரங்களை கூர்ந்து கவனித்து வந்தார். ருஷியாவின் புரட்சிப்போக்கு இவரை ஆகர்ஷித்தது. பிரான்சிலுள்ள இடது சாரியினர் இவருடைய கருத்துகளைப் பெரிதும் மதித்தனர். இடது சாரியினரின் சங்கத்தில் இவர் ஒரு பிரசங்கம் செய்தார். சாம்ராஜ்யங்களின் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பற்றி அப்பொழுது இவர் பேசியதை பாராட்டாதவர்கள்கிடையாது. பாராட்டுதலுக்கு அறிகுறியாக அடுத்த வருஷம் நடைபெற்ற சர்வ தேச விவசாயிகள் மகாநாட்டுக்கு இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

## மாறு பெயருடன் வாசம்

பிரான்ஸில் இவர் மாறுபெயருடன் வாழ்ந்துவந்தார். இவருடைய பிரசங்க வன்மையையும், வாதத் திறமையையும் பற்றி கேள்விப்பட்டு, மாஸ்கோவிலுள்ள பொதுவுடைமைக் கட்சி இவரை ருஷியாவுக்கு அழைத்தது. அங்கு ஏழு வருஷங்கள் தங்கியிருந்தார். சோவியத்பிரஜா உரிமையைப் பெற்றார். ருஷிய வாசத்தால் இவருடைய புரட்சி மனோபாவம் விசாலமடைந்தது. ருஷியாவிலிருந்து ஒரு பழுத்த புரட்சி வீரராக இவர் சீனாவுக்கு அனுப்பப்பட்டார். அங்குள்ள ருஷிய ஸ்தானீகர் காரியாலயத்தில் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார்.

சீனாவிலிருந்து 1930-ம்
ஷம் இந்தோ—சீனாவுக்குத்திரு
ஒரு மாபெரும் புரட்சி இ
கத்தை நடத்த முற்பட்டார்.

## துரோகி எனும் பழி

இவரைக்கைதுசெய்து இரண்
வருஷக் கடுங்காவல் தண்ட
விதித்து விட்டனர்.

அரசியல் வாழ்க்கையி
பெரும் பகுதியைச்சிறை வா
தில் கழித்திருக்கும் ஹோ-
மின் ஜப்பான் இந்தோ-சீன
ஆக்கிரமித்தவுடன், ஒரு கொ
லாப் படை நிறுவி, ஜப்பானி
ருக்கு எல்லையற்ற தொல்லை
விளைவித்து வந்தார். அப்பொ
ழுதுதான் வியட்நாம் என்
இயக்கத்தை இவர் ஆ
பித்தார்.

ஜப்பானை எதிர்த்து வந்
ஹோ-சி-மின்னை எதிரிபு
குலாவிய துரோகி என்று சி
கூறுவது அபத்தமாகும். த
நாட்டுக்கு விடுதலை கிடைப்ப
திருந்தால், தாம் எந்த நாட்டி
ருடனும் ஒத்துழைக்கத் தய
என்று ஒரு தடவை இவர் க
யிருக்கிறார்.

'வியட்நாம்' ஜன சபை
1945ல் செப்டம்பர் 2-ந் தே
நிறுவப்பட்டு, ஹோ-சி-மி
அதன் தலைவராகத் தேர்ந்தெ
கப்பட்டார். சீன கோமிந்த
கட்சி ஜப்பானிய யுத்த கா
தில் இவருக்கு உதவி புரி
வந்தது; ஆனால் முன்பு சீன
விருந்து வெளியேற்றப்பட்ட
ஹோ-சி-மின் என்பது அவ
ளுக்குத் தெரிந்தவுடன் ஒத்
ழைப்பை மறுத்து விட்டனர்.

இந்தோ—சீனாவை ஒரு சு
திர நாடாக ஒப்புக்கொண்
வியட்நாம் தலைவர் ஹோ-
மின்னுக்கு சம அந்தஸ்
அளித்து அவருடன் ஒப்பந்
செய்துகொள்ள பிரெஞ்சு ச
கார் அழைத்திருப்பதே ஹோ
சி-மின்னின் பெருமையைக்கும்

."ஜனநாயக

Edited Printed Published by C. N. Annadurai M. A., at ,Dravida Nadu' Press, 317—319 Hodgsonpet Conjeeveram